செ.வெ.எண். 35 நாள். 26.1.2012

**நாமக்கல் வட்டம் வசந்தபுரம் முதல்நிலை ஊராட்சி சின்னவேப்பநத்தம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் குடியரசு தினத்தை முன்னிட்டு கிராமசபா கூட்டம் இன்று நடைபெற்றது. வசந்தபுரம் முதல்நிலை ஊராட்சி சின்ன வேப்பநத்தம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.

கிராம சபாக்கூட்டத்தில் ஊராட்சியின் வரவு, செலவு கணக்கு விவரம் தெரிவிக்கப்பட்டது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைஉறுதி திட்டத்தில் வேலை அடையாள அட்டைகள், தினசரி வருகை பதிவேடு உள்ளிட்ட 5 பதிவேடுகள் கிராம பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. தாண்டாகனூர் கிராமத்தில் உள்ள ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் புனரமைக்கப்பட்டு மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் நிர்வகிக்கப்படவுள்ளது. விரைவில் சுகாதார வளாகம், மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ள விவரம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. கூடிய விரைவில் சாதி வாரி பொருளாதார கணக்கெடுப்பு நடைபெறவுள்ளது. இக்கணக்கெடுப்பிற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டது.

பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் விவரம், வாக்காளர் பட்டியல் ஆகியவைகள் கிராம சபாகூட்டத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேலும் நியாயவிலைக்கடையின் கணக்குகளும் சமூக தணிக்கைக்கு வைக்கப்பட்டது. முழு சுகாதார திட்டத்தின்கீழ் அரசு தனிநபர் கழிப்பறை அமைத்திட ரூ.3200 மானியமாக வழங்குகிறது. இந்நிதியைப்பயன்படுத்தி கழிப்பறைகள் அமைத்திட பொதுமக்களை கேட்டுக் கொள்ளப்பட்டது. பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 15 வீடுகள் கட்டும் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் 9 வீடுகள் கட்டும் பயனாளிகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயனாளிகள் விவரம் கிராம சபாவில் தெரிவிக்கப்பட்டது. மேலும் அட்மா திட்டத்தின்கீழ் திரு.தங்கராசு என்பவர் உழவர் நண்பனாக தேர்வு செய்யப்பட்ட விவரம், கிராம சபாவில் தெரிவிக்கப்பட்டது.

கிராம சபா கூட்டத்தில் நாமக்கல் சார் ஆட்சியர் டாக்டர். டி.ஜி.வினய், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.ஜி.மலர்விழி, நாமக்கல் வட்டாட்சியர் திருமதி.இரா.புஷ்பவதி, வசந்தபுரம் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.சி.ரேகா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ஆர்.எஸ்.சுப்பரமணியம், எம்.நாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.